# மாற்கு சுவிசேஷத்தில் இயேசு

Pr. K.Joseph

இயேசுவைக் குறித்து அநேகருக்குத் தெரியும். ஆனால் அவருடைய அடையாளங்களைக் குறித்தோ அல்லது அவருடைய புனைப்பெயர்களைக் குறித்தோ அநேகருக்கு அதிகமாகத் தெரியாது. மாற்கு சுவிசேஷம் இயேசுவுக்குக் கொடுக்கிற முக்கிய அடையாளப் பெயர்களைக் குறித்து நாம் இப்பொழுது பார்க்கவிருக்கிறோம்.

**முகவுரை:** மாற்கு சுவிசேஷத்தில் மொத்தம் *16* அதிகாரங்கள் உள்ளன. அதில் முதல் அதிகாரத்தில் *10* அடையாளப் பெயர்களும், *2* முதல் *16* அதிகாரங்களாகிய மீதமுள்ள *15* அதிகாரங்களில் *10* அடையாளப் பெயர்களும் உள்ளன. பெயர்கள் பொதுவாக ஒரு நபருடைய குணாதிசயத்தையும், சுபாவத்தையம், பொறுப்பையும், வேலையையும் தனித்தன்மையையும் குறிப்பதாக இருக்கிறது. உதாரணத்திற்கு "**இயேசு**" என்றால் "**ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிக்கிறவர்**" என்று பொருள்படும். அது இயேசுவின் தனித்தன்மையாகவும், வேலையாகவும், பொறுப்பாகவும் இருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

இயேசுவைக் குறித்து அறிகிற அறிவில் வளருதல், அவரை நாம் இன்னும் ருசித்து ஆராதித்திடவும், அவரோடு நெருங்கி உறவாடவும் நம்மை வழிநடத்துகின்றன. நாம் இயேசுவைக் குறித்து எதற்காக அதிகமதிகமாக அறிய வேண்டும்? காரணம் இவரோடு தான் நாம் நித்தியமாக இருக்கப்போகிறோம். முதல் அதிகாரத்தில் வரும் *10* அடையாளப் பெயர்களைக் குறித்து முதலாவது நாம் பார்க்கலாம்.

1. *மாற்கு–1: 1* ***தேவனுடைய குமாரனாகிய இயேசு*** *கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்.*

   இயேசு "தேவனுடைய குமாரன்" என்று அழைக்கப்படுகிறார். தேவனுடைய குமாரன் என்பது திரித்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசு தெய்வீகத்தின் முக்கிய நபராக, தெய்வீகமானவராக இருக்கிறார் என்பதை இது நமக்கு வெளிப்படுத்துகிறது. நாம் அறிந்திருக்கிற, நம்மை இரட்சித்த இயேசு வெறும் மனிதன் அல்ல, மாறாக அவர் தேவனாக இருக்கிறார். ஆதியிலிருந்தே உலகத்தை உருவாக்கும் போது வார்த்தையால் எல்லாவற்றையும் உருவாக்கினவர், உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே என்றென்றைக்கும் இருக்கிறவராகிய இவர் ஆராதனைக்குப் பாத்திரராக இருக்கிறார். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் என்று **1யோவான் 3: 8** சொல்வதைக் கவனியுங்கள். தேவனுக்கு முன் பிசாசு ஜெயிக்க முடியாது, நிலைநிற்கவே முடியாது. தேவனுக்கு முன் பிசாசு கீழ்படிந்துதான் ஆக வேண்டும். தேவனுடைய குமாரன் என்பது மிகவும் மேன்மையான, கனத்திற்குரிய நாமமாகும். இயேசு தேவனுடைய குமாரன் என்பதைக் குறிப்பிடும் மற்ற வசனங்களைப் பாருங்கள்:

   - *மாற்கு–1: 11 நீர்* ***என்னுடைய நேசகுமாரன்****, உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.*
   - *மாற்கு 3: 11 அசுத்த ஆவிகளும் அவரைக் கண்டபோது, அவர் முன்பாக விழுந்து:* ***நீர் தேவனுடைய குமாரன்*** *என்று சத்தமிட்டன.*
   - *மாற்கு–5: 7 இயேசுவே,* ***உன்னதமான தேவனுடைய குமாரனே****, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாத படிக்குத் தேவன்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.*

- மாற்கு–9: 7 (மறுரூப மலையிலே) *இவர் **என்னுடைய நேசகுமாரன்**, இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.*
- மாற்கு–14: 61 *மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி: நீ ஸ்தோத்தரிக்கப்பட்ட **தேவனுடைய குமாரனாகிய** கிறிஸ்துதானா? என்று கேட்டான்.*
- மாற்கு–15: 39 *அவருக்கு எதிரே நின்ற நூற்றுக்கு அதிபதி அவர் இப்படிக் கூப்பிட்டு ஜீவனை விட்டதைக் கண்டபோது: **மெய்யாகவே இந்த மனுஷன் தேவனுடைய குமாரன்** என்றான்.*

இயேசு தேவனுடைய குமாரன் என்பதை தேவனும் அசுத்த ஆவிகளும், புறஜாதியான நூற்றுக்கு அதிபதியும் அறிந்திருந்தார்கள். ஆனால் யூதர்களும் பிரதான ஆசாரியர்களுமோ அதை அறியவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ இல்லை. இதினிமித்தம்தான் அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொல்லப்படும்படி ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால் நமக்கோ அவர் தேவனுடைய குமாரன் என்பதை தேவன் கிருபையாய் வெளிப்படுத்துகிறார்.

2. மாற்கு–1: 7 *என்னிலும் **வல்லவர்** ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல.*

   இந்த வசனத்திலே யோவான் ஸ்நானகன் இயேசுவை "வல்லவர்" என்று குறிப்பிடுகிறார். ஆங்கிலத்தில் இதற்கு Mighty One என்று உள்ளது. அதாவது *பராக்கிரமமுள்ள ஒருவர்* என்று அதற்குப் பொருள். இயேசுவின் வல்லமை இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளையும், ஆச்சரியமானவைகளையும், பயங்கரமானவைகளையும் செய்யக்கூடியதாக இருக்கிறது. பிணியாளிகளைக் குணமாக்கும்படி அவரிடத்திலிருந்து வல்லமை வெளிப்பட்டது. அசுத்த ஆவிகளை அலற வைக்கும்படி அவருடைய வல்லமை செயல்பட்டது. ஏசாயா தீர்க்கதரிசியும் **வல்லமையுள்ள தேவன்** என்று இயேசுவைக் குறித்து முன்னறிவித்துள்ளார் (ஏசாயா–9: 6).

3. மாற்கு–1: 8 *நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன், அவரோ **பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.***
   இயேசுவுக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பெயர் இவருக்கே உரிய ஒரு தனிப்பெயராகும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுப்பவர் என்று யோவான் அவரைக் குறித்து அறிமுகப்படுத்துகிறார். மற்ற நபர்கள் தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுப்பார்கள். ஆனால் யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்க முடியாது. மனிதர்கள் அல்லது ஊழியர்கள் அதைக் குறித்து அறிவிக்கலாம், கற்றுக்கொடுக்கலாம், பெற்றுக்கொள்ளுதலின் அவசியத்தை வலியுறுத்தலாம், அதற்காக ஜெபிக்கலாம், யாராலும் இந்த ஞானஸ்நானத்தைக் கொடுக்க முடியாது, அதைக் கொடுப்பவர் இயேசு தான். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது அபிஷேக அனுபவத்தை, அனல் மூட்டப்படும் அனுபவத்தை, சுத்திகரிக்கப்படும் அனுபவத்தை, வேறுபிரிக்கப்படும் அனுபவத்தை நாம் இயேசுவிடமிருந்து பெற்றுக்கொள்ளுதலைக் குறிக்கிறது. மேல்வீட்டிலே சீடர்களும் பெண்களும் ஒருமனப்பட்டுக் கூடி ஜெபித்துக்கொண்டிருந்தபோது முதன்முதலில் பரிசுத்த ஆவியானவர் அவர்களை நிரப்பின சம்பவத்தைக் குறித்து நாம் அப்போஸ்தலர்–2 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்குரிய அடையாளமாக இருக்கிறது. அவர்கள் நிரப்பப்பட்டார்கள், அந்நிய பாஷையில் பேசினார்கள். அநேகர் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

அப்போஸ்தலர் 2: 38ல் "நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்ட மக்களுக்குப் பேதுரு பதிலுறைத்தபோது, நீங்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறியிருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த பூமிக்குரிய வாழ்வில் நாம் உன்னத பெலத்தைப் பெற்றவர்களாக வாழ்ந்திட வேண்டும் என்பது இயேசு கிறிஸ்துவின் கட்டளையாக இருக்கிறது (அப்-1: 8), பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் *பெலனடைந்து சாட்சிகளாக இருப்பீர்கள்* என்றும் சொல்லியிருக்கிறார்.

4. மாற்கு-1, 14-15 *இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய* ***ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:*** *காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார்.* ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர் (சுவிசேஷகர்) என்று அவரைக் குறித்த மற்றொரு அடையாளத்தை நாம் பார்க்கிறோம். நற்செய்தியாக வந்தவர், நற்செய்தியாக வாழ்ந்தவர் நற்செய்தியை அறிவிக்கிறார், நற்செய்தியை அறிவித்தவர், நற்செய்தியை அறிவிக்குமாறு நமக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார். ராஜ்யத்தைக் குறித்த நற்செய்தி என்னவென்றால் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்பவர்கள் தேவனுடைய ராஜ்யமாகிய 1000 வருட அரசாட்சிக்குள்ளும், அதைத் தொடர்ந்து நிலைத்திருக்கப்போகிற தேவனுடைய நித்திய ராஜ்யத்திற்குள்ளும் பிரவேசித்து, அவரோடுகூட ராஜாக்களாக ஆளுகை செய்வார்கள் என்பதாகும். மாற்கு 1: 38,39ல் *அடுத்த "ஊர்களிலும் நான்* ***பிரசங்கம்பண்ண வேண்டுமாதலால்,*** *அவ்விடங்களுக்குப் போவோம் வாருங்கள், இதற்காகவே புறப்பட்டுவந்தேன் என்று சொல்லி, கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர்* ***பிரசங்கம்*** *பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்."* இயேசு கிறிஸ்து மறுபடியும் பூமிக்கு வருவதற்கு முன் ராஜ்யத்தின் சுவிசேஷம் பூமியிலுள்ள சகல தேசங்களுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் என்று இயேசு சொல்லியிருக்கும் வார்த்தையானது (மத்தேயு-24: 14), சுவிசேஷத்தை அறிவிக்கும்படியான தாகத்தையும் பாரத்தையும் நம்மைப் பெற்றுக்கொள்ள வைப்பதாக.

5. மாற்கு-1: 22 *பின்பு கப்பர்நகூமுக்குப் போனார்கள். உடனே அவர் ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து,* ***போதகம் பண்ணினார்.*** மாற்கு சுவிசேஷத்தில் இயேசு போதகம்பண்ணிய செயல் அதிக கவனத்திற்குரியதாக விவரிக்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கிறோம். 'போதகர்' என்றால் ஆசிரியர், கற்றுக்கொடுப்பவர், குரு என்று பொருள்படும். ஐந்துவகை ஊழியங்களைக் குறித்து எபேசியர்-4: 12-13 வசனங்களில் சொல்லப்பட்டுள்ளதை நாம் வாசிக்கிறோம். அதில் போதக ஊழியமும் ஒன்றாக இருக்கிறது. அந்த ஊழியங்கள் அனைத்தும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக கிறிஸ்துவின் சரீரமான சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகக் கொடுக்கப்பட்டடிருக்கின்றன. நான் உங்கள் மத்தியிலே இப்பொழுது செய்து கொண்டிருப்பது போதக ஊழியம். சத்தியத்தை எளிதில் புரிந்துகொள்ளுமாறு கற்றுக்கொடுத்து, அதைக் கைகொள்ள மக்களை நடத்திச் செல்வது இந்த ஊழியத்தின் நோக்கமாகும். இயேசுவின் போதகம் அதிகாரமுடையதாகவும், ஆச்சரியப்படவைக்கிறதாகவும் இருந்தது. அவர் போதித்ததைக் குறித்தும் அவர் போதகர் என்ற அடையாளத்தோடு அழைக்கப்பட்டதைக் குறித்துப் பல வசனங்களில் நாம் வாசிக்கிறோம். போதகர் என்றும், ரபூனி என்றும், ரபீ என்றும் இயேசு அழைக்கப்பட்டார்.

**வசனக் குறிப்புகள்:**
மாற்கு–2: 13,
மாற்கு 5: 35
மாற்கு 6: 2
மாற்கு 8: 31
மாற்கு 9: 5, 17, 31, 38
மாற்கு 10: 1, 17, 20, 35, 51
மாற்கு 11: 17, 14, 21, 32
மாற்கு 12: 17, 32, 35, 38
மாற்கு 13: 1
மாற்கு 14: 14, 45, 49

6. மாற்கு–1: 24 அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னார் என்று அறிவேன், நீர் **தேவனுடைய பரிசுத்தர்** என்று சத்தமிட்டான்.
பரலோகத்திலே எப்பொழுதும் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்ற நாமம் போற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இயேசுவின் பிறப்பிற்கு முன்பே அவருடைய பிறப்பைக் குறித்து அறிவிக்க வந்த தேவதூதன் லூக்கா–1: 35ல் *பரிசுத்தஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும்* ***பரிசுத்தமுள்ளது*** *தேவனுடைய குமாரன் என்னப்படும்* என்று குறிப்பிட்டுள்ளார். பரிசுத்தர் என்றால் பாவமில்லாதவர் என்பது மாத்திரமல்ல, மற்றவர்களைப் போல பொதுவானவரல்ல, வேறுபிரிக்கப்பட்டவர், விசேஷித்தவர், தனித்தன்மை வாய்ந்தவர் என்றும் பொருள்படும். நம்மையும் தேவன் பரித்தவான்களாக மாற்றியிருக்கிறார். இயேசுவின் சுபாவம் நம்மிலும் காணப்படுவதாக.

7. மாற்கு–1: 25 அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார். இயேசுவுக்குரிய மற்றொரு சிறப்பு என்னவென்றால் அவர் அசுத்த ஆவிகளைத் துரத்துபவராகச் செயல்பட்டார். நன்மை செய்பவராகவும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் விடுவிக்கராகவும் அவர் சுற்றித்திரிந்தார் (அப்–10: 38). பிசாசுகளைத் துரத்ததுதல் இயேசுவுக்கு மிகவும் பிடித்த ஊழியம். சாத்தானுடைய ராஜ்யத்தை அகற்றி தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிற ஊழியமாக இந்த ஊழியம் இருக்கிறது. தான் மாத்திரமல்ல, தன்னுடைய அப்போஸ்தலர்களையும், தன்னுடைய சீடர்களையும் பிசாசுகளைத் துரத்துவதற்கான அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களை அனுப்பி இந்த ஊழியத்தில் பயன்படுத்தினார். “விசுவாசிக்கிற அனைவரும் என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்” என்று நம்மைக் குறித்தும் அவர் சொல்லி வைத்திருக்கிறார் (மாற்கு–16: 17).

மாற்கு–1: 34 *பலவிதமான வியாதிகளினாலும் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர் சொஸ்தமாக்கி, அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்.*
மாற்கு–1: 39 *கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர்பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக்கொண்டும் இருந்தார்.*

# மாற்கு சுவிசேஷத்தில் இயேசு: (தொடர்ச்சி)

8. மாற்கு–1: 30,31 *அங்கே சீமோனுடைய மாமி ஜுரமாய்க் கிடந்தாள், உடனே அவர்கள் அவளைக் குறித்து அவருக்குச் சொன்னார்கள். அவர் கிட்டப்போய், அவள் கையைப் பிடித்து, அவளைத் தூக்கிவிட்டார், உடனே ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று.*

இயேசு **சுகமாக்குபவராக** அறிமுகப்படுத்தப்படுவதை இந்த வசனத்தில் நாம் பார்க்கிறோம். **சுகமாக்குபவர்:** சுகம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கு இயேசு கிறிஸ்துவால் சம்பாதித்து வைக்கப்பட்டுள்ள ஒரு சொத்தாக இருக்கிறது. கல்வாரி சிலுவையிலே இயேசு காயப்பட்டவராகத் தொங்கியபோது அந்தக் காயங்கள் மூலமாக நம்முடைய சுகத்தை வர் விலைகொடுத்து வாங்கினார். ஆதன் அடையாளமாக அவருடைய சரீரத்திலே கை கால்களிலே தழும்புகளை உடையவராக இப்பொழுதும் அவர் இருக்கிறார். அவருடைய தழும்புகளால் நாம் சுகமாகிறோம் என்று 1பேதுரு–2: 24ல் நாம் வாசிக்கிறோம். *அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார், அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.* மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்துகொண்டார்.

மாற்கு–1: 34 *பலவிதமான வியாதிகளினாலும் உபத்திரவப்பட்டிருந்த அநேகரை அவர்* ***சொஸ்தமாக்கி,*** *அநேகம் பிசாசுகளையும் துரத்திவிட்டார்.* இயேசுவால் சுமாக்கப்படமுடியாத நோய் ஒன்றுமில்லை. அவரை விசுவாசிப்பவர்கள், அவர்மேல் முழு நம்பிக்கை வைப்பவர்கள், அவரைத் தேடுபவர்கள் இந்த நாட்களிலும் சுகமாக்கப்படுவதை, வியாதி இல்லாத சுகம் நிறைந்த வாழ்க்கை வாழ்வதை நாம் பார்க்கிறோம். நம்மிலேயும் அநேகர் இதை அனுபவிக்கிறவர்களாகவும் இருக்கிறோம். தேவனுடைய நாமங்களில் ஒன்று **யெகோவா ரா:.பா** என்தாகும். அதன் பொருள் என்னவென்றால் கர்த்தர் என்னைச் சுகமாக்குபவர், என்னுடைய மருத்தவர், பரம வைத்தியர். பூமியிலே வாழ்ந்தபோது சிறிய காய்ச்சல் முதல் பெரிய மரண வியாதியையும் இயேசு சுகமாக்கினார். பிணியாளிகளைக் குணமாக்கத்தக்கதாக இயேசுவினிடத்திலிருந்து வல்லமை விளங்கிற்று.

9. மாற்கு–1: 35 *அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே* ***ஜெபம்பண்ணினார்.***

இந்த வசனம் இயேசு ஒரு **ஜெபவீரர்** என்பதை நமக்குக் காட்டுகிறது. ஜெபத்திற்குப் பதில் கொடுப்பவர், தேவகுமாரனாகிய தேவனே ஜெபிக்கிற செயல் நமக்குக் கற்பிக்கிற பாடம் என்ன? ஒவ்வொரு தேவபிள்ளையினுடைய வாழ்விலும் ஜெபம் மிகவும் அவசியமானதாக இருக்கிறது. ஜெபம்தான் ஜீவன், ஜெபமில்லையேல் ஜெயம் இல்லை. இயேசு ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். தன் பரலோகத் தகப்பனோடு ஜெபத்தின் மூலம் உறவாடினார், பரலோகத் தகப்பனுடைய விருப்பத்தை அறிந்து அதைச் செயல்படுத்தினார்.

- ❖ அதிகாலையிலும், இரவிலும். மாலையிலும் ஜெபித்தார்
- ❖ தனியாவும் குழுவாகவும் ஜெபித்தார்
- ❖ தனிமையான இடத்திற்குச் சென்று, வனாந்திரமான இடத்திற்குச் சென்று. மலைமேல் ஏறி ஜெபித்தார்.
- ❖ உபாவசித்து ஜெபித்தார், இராமுழுதும் கண்விழித்துச் ஜெபித்தார், போராடி ஜெபித்தார்,

- ❖ பிதாவின் சித்தம் நிறைவேறிட ஜெபித்தார்,
- ❖ தம்முடைய சீடர்களுக்காகவும், தம்மை விசுவாசிப்பவர்களுக்காகவும், அதாவது நமக்காகவும் ஜெபித்தார்.

இயேசு ஜெபித்ததைக் குறித்து நாம் சுவிசேஷங்களில் ஏராளமான குறிப்புக்களை வாசிக்கிறோம். நாம் ஜெபிக்க வேண்டும் என்பதற்கு இயேசுவின் ஜெபமாதிரியே சிறந்த முன்அடையாளமாக இருக்கிறது. சோதனைகளை ஜெயித்திட, சோர்வுக்குள்ளாக்கப் படாமலிருக்க, பரலோக தேவனுடைய சித்தம் அறிந்து செய்திடு. அவரோட உறவில் மகிழ்ந்திட நமக்கு ஜெபம் மிகவும் தேவை என்பதை இயேசு நமக்குக் காண்பித்துள்ளார்.

மாற்கு–6: 46 அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, **ஜெபம்பண்ணும்படி** ஒரு மலையின் மேல் ஏறினார்

மாற்கு–14: 35,39 *சற்று அப்புறம்போய், தரையிலே விழுந்து, அந்த வேளை தம்மைவிட்டு நீங்கிப்போகக்கூடுமானால் அது நீங்கவேண்டுமென்று* ***வேண்டிக்கொண்டு,*** *அவர் மறுபடியும் போய் அந்த வார்த்தைகளையே சொல்லி* ***ஜெபம்பண்ணினார்.***

10. மாற்கு–1: 40 குஷ்டரோகி ஒருவன் அவரிடத்தில் வந்து, **அவர் முன்பாக முழங்கால்படியிட்டு:** உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்று வேண்டிக்கொண்டான்.

இயேசு **ஆராதனைக்கு உரியவராக** இருக்கிறார். ஆராதிக்கப்படுதல் என்பது தேவனுக்கு மாத்திரமே உரிய தனிஉரிமையாகும். வேறுயாரும் அதைப் பெற்றுக்கொள்வதையோ வேறு யாருக்கும் அது கொடுக்கப்படுவதையோ தேவன் விரும்புவதில்லை. “என்னுடைய மகிமையை ஒருவனுக்கும் கொடேன்” என்று தேவன் சொல்லியிருப்பதைக் கவனியுங்கள். இயேசுவைத் தேவனாக அறிந்தவர்கள் அவரை ஆராதிக்க வேண்டியதின் முக்கியத்துவத்தைக் கண்டுபிடிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

வெளி–5: 13,14 *அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். இருபத்துநான்கு மூப்பர்களும் வணக்கமாய் விழுந்து சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள்.*

இடைவிடாமல் ஆராதனை, இரவும் பகலும் ஆராதனை, ஆவியோடும் உண்மையோடும் ஆராதனை, மகிழ்வுடனே ஆராதனை செய்து நாம் வாழ்ந்திட வேண்டும் என்று அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆராதனைக்குரியவரை ஆராதிக்க நாம் ஒருபோதும் மறக்க வேண்டாம், தயங்க வேண்டாம்.

மாற்கு–5: 6,22 *அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப்* ***பணிந்துகொண்டு,***

*அப்பொழுது, ஜெபஆலயத் தலைவரில் ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர்* ***பாதத்திலே விழுந்து.***

நாம் இயேசுவுக்குக் கொடுப்பது ஆராதனை, அவர் நமக்குக் கொடுப்பது அலங்கரிப்பு. நம்முடைய அன்பை அவருக்கு வெளிப்படுத்திக் காட்டுவது ஆராதனை. தம்முடைய அன்பால் அவர் நம்மை ஆட்கொள்ளுவது அலங்கரிப்பு.